# தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6

ந.க.எண்:00103/என்2/2018 நாள்:12.05.2018

பொருள்:– பள்ளிக் கல்வி இயக்ககம் – 2018–19ஆம் கல்வியாண்டில் பள்ளிகள் திறப்பு ஜுன் 1 – மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் – அறிவுரை வழங்குதல் – சார்ந்து.

*************

கோடை விடுமுறை முடிந்து 2018–19ஆம் கல்வியாண்டில் ஜுன் 1ம் தேதியன்று அனைத்துவகையான பள்ளிகளும் திறக்கப்படுமென மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்னதாக அறிவித்துள்ளார்கள். அதனடிப்படையில், ஜுன் 1 ம் தேதி முதல் அனைத்து வகையான பள்ளிகளும் கோடை விடுமுறை முடிந்து திறக்கப்பட உள்ளன. இந்த சூழலில் ஜுன் 1ம் தேதியன்று மாணவர்கள் பள்ளிக்கு வரும்போது பள்ளி வளாகம் தூய்மையானதாகவும், நேர்த்தியானதாகவும், கற்கும் சூழலுக்கு ஏற்ற வகையிலும் தயார் நிலையில் இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் கீழ்க்கண்ட வழிகாட்டுதலைப் பின்பற்றி பள்ளி வளாகத்தினை தயார்படுத்திடுமாறு அறிவிக்கப்படுகிறது.

1. பள்ளிகளில் உள்ள தண்ணீர் தொட்டிகள் மற்றும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளை கிரிமி நாசினி பயன்படுத்தி தூய்மையாக பராமரிக்க வேண்டும்.

2. பள்ளிகளில் உள்ள கழிவறைகள் அனைத்தையும் சுத்தம் செய்திடவும் கழிப்பறைகளில் ஏதேனும் பழுதுகள் இருந்தால் அதனை சரிசெய்து மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் அமைத்திடவும் வேண்டும்.

3. மாணவர்களது எண்ணிக்கைக்கு தகுந்த வகையில் குடிநீர்க் குழாய், கழிவறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பறைகள் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் குறைவாக இருந்தால் தேவையான எண்ணிக்கையில் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. பள்ளி வளாகத்தில் புதர்கள், கற்குவியல்கள் மற்றும் கழிவுப் பொருட்களின் குவியல்கள் இல்லாதவாறு தூய்மையானதாக வைத்திருத்தல் வேண்டும். பள்ளி வளாகத்தில் பள்ளங்கள் ஏதேனும் இருந்தால் அவற்றை மூடி சரிசெய்தல் வேண்டும்.

-- 2

5. கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டி, கழிவுநீர் தொட்டி ஆகியவை முறையாக மூடப்பட்டு பராமரிக்கப்படல் வேண்டும்.

6. வகுப்பறைகளை தூய்மைப்படுத்துதல் வேண்டும். மேலும், வகுப்பறைகளில் பழுதடைந்த நிலையில் மின்விசிறி, மின்விளக்குகள் இருப்பின் அவற்றை பழுதுநீக்கி பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் மாற்ற வேண்டும்.

7. பள்ளிக் கட்டிடங்களின் மேற்கூறைகளில் பழுதுகள் ஏதேனும் இருந்தால் உடனடியாக சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

8. வகுப்பறைகளின் கதவு, ஜன்னல்கள் ஆய்வு செய்து மராமத்து பணிகள் மேற்கொண்டு நல்ல நிலையில் இருப்பதை உறுதி செய்திடல் வேண்டும்.

9. பள்ளிகள் திறக்கும் நாளன்றே மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள் போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை தலைமையாசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

10. பள்ளி திறக்கும் நாளன்றே ஆசிரியர்கள் மற்றும் வகுப்புகளுக்கான கால அட்டவணை (Time Table) வழங்கப்படுதல் வேண்டும்.

மேற்கண்ட சுற்றறிக்கையினை அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் அனுப்பி கோப்பில் வைக்க முதன்மைக் கல்விஅலுவலர்களுக்கு தெரிவிக்கலாகிறது. முதன்மைக் கல்வி அலுவலர்களும் மாவட்டக் கல்வி அலுவலர்களும் தங்கள் பள்ளி ஆய்வின்போது மேற்கண்ட பணிகள் நடைபெற்றிருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

12-5-18

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்/ மாவட்டக் கல்வி அலுவலர்கள்

1258

நகல்: அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை–9 அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல் : தொடக்கக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை–6 அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.

நகல் : மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6 அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.